அடிப்படை கணக்கியற் கோட்பாடுகள்

Basic Accounting Principles

(Theory)

Accounting Concept

Accounting Assumptions

Accounting Conventinos

By

NALLIAH KUMARAGURUPARAN

நல்லையா குமரகுருபரன்

கணக்கியற் கோட்பாடுகள்
Accounting Principles

நல்லையா குமரகுருபரன்
Visting Lectrurer Gov,t Technical College
அதிதிவிரிவுரையாளர் தொழில் நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம்

IMS Publication

மேலாண்மைக்கல்வி நிறுவன வெளியீடு

என் தந்தை

அமரர். மு. நல்லையா FCMA(England) ACA

அவர்களுக்கு

முன்னுரை:

"கணக்கியற் கோட்பாடுகள்" என்பது கணக்கீட்டுமுறையிற் பின்பற்றப்படும் எண்ணக் கருக்களெனும் விதிகளும், மரபுகளெனும் பாரம்பரியங்களும், எடுகோள்களுமாகும். கணக்குப் பதிவியலில் இரட்டைப் பதிவுமுறை விதிகள் தரும் அடிப்படைக் கீடாக கணக்கீட்டில் இக்கணக்கியற் கோட்பாடுகளே அடிப்படை விதிகளாய் அமைகின்றன எனவே கணக்கியலைப்பாடமாகக் கொள்ளும் மாணவர்களுக்கும் தொழில்துறைசார் பயிலுனர்களுக்கும் இவ்வடிப்படைக்கோட்பாடுகள் பற்றியதோர் தெளிவான திட்டமான அடிப்படை அறிவு அத்தியாவசியம்.

அந்தவகையில் இச்சிற்றேட்டில் செய்முறை உதாரணங்களும் இடம்பெறின் மாணவர்களுக்கு இதுமேலும் பயன் பெற்றமையும் எனப்பல நல் ஆலோசனைகளை தொழில்நுட்பக் கல்லூரியின் பகுதித்தலைவர் W. J. சூசை ரத்தினம் B. Com அவர்கள் தந்தார்கள் எனினும் குறுகிய காலத்தில் இதனை அச்சேற்றி தருவதில் திருவள்ளுவர் அச்சகத்தாரின் முயற்சி இடருக்குள்ளாக்கக் கூடாது என்தனை கருத்திற் கொண்டு சிறு பதிப்பு Theory ஆகவே வெளிவருகின்றது.

மேலும் சிறுசிறு பாகங்களாய்ப் பாடங்கள் அமைதல் கூடிய கிரகித்தல் வினைதிறன் உடையது என்பது என் நம்பிக்கை அந்த வகையில் இந்நூல் கணக்கியல் மாணவர்களுக்கும் துறைசார்பயிலுனர்களுக்கும் பயனுடையதாயமையுமென நம்புகிறேன்.

ஆசிரியன்

கணக்கியற் கோட்பாடுகள்
ACCOUNTING PRINCIPLES

" கணக்கியல் " எனும் தொழில்சார் சொல்லானது இத் தொழிலுக்கான மொழியாக அமைகின்றது. ஒவ்வோர் நிறுவனங்களும் தாம்சார்ந்த தகவல்களையும் மற்றும் ஏனைய நிறுவனங்களின் நிலைமைகளையும் இம்மொழி மூலமாகவே வெளிப்படுத்திக்கொள்கின்றன. எனவே இம்மொழி எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையில் அமையவேண்டுமாதலின் கணக்கியல் விதிகள் நடைமுறைகள் மற்றும் பழக்க வழக்கங்களில்ஒரே நியதி மற்றும் பாரம்பரியம் பின் பற்றப்படுதலவசியம். இப்பழக்க வழக்கங்களின் நியதியே கணக்கியல் நடவடிக்கைளைக் கணக்கீட்டாளர்கள் பதிவு செய்யும் போதும் கணக்கியற் கூற்றுக்களைத் தயாரிக்கும் போதும் கடைப்பிடிக்கும் சட்டதிட்டங்களாகும்.

இந்நியதிகளையே இங்குயாம் கணக்கியற் கோற்பாடுகள் என்றழைக்கின்றோம்.

இக்கணக்கியற் கோட்பாடுகள் மூவகையில் பிரிக்கப்படுகின்றது.

1. Accounting Concepts
   கணக்கியல் எண்ணக் கருக்கள் (கருத்துக்கள்)
2. Accounting Conventions
   கணக்கியல் மரபுகள் (பாரம்பரியங்கள்)
3. Accounting Assumptions
   கணக்கியல் எடுகோள்கள்

1. கணக்கியல் எண்ணக்கருக்கள் பின்வருமாறு

1. 1 தனித்தன்மை எண்ணக்கரு
Entity Concept

1. 2 தொடர் நிலைக் (தொடர்ந்தியங்கும்) கருத்து
Going Concern Concept

1. 3 பண அளவீடு எண்ணக்கரு
Money Measurement Concept

1. 4 அடக்கவிலை (கிரய) எண்ணக்கரு
Cost Concept

1. 5 இரட்டை விளைவு(இரட்டைப்பதிவு) எண்ணக்கரு
Dual – aspect Concept

1. 6 கணக்கியற் காலக் கருத்து
Accounting Period Concept

1. 7 ஈடுகட்டும் மற்றும்அட்டுறு/சேர்வுறு எண்ணக்கரு

1. 8 தேறல்(தீர்வு) எண்ணக்கரு
Realisation Concept

கணக்கியல் மரபுகள் பின்வருமாறு

2. 1 பழமை பேண் மரபு
Conservatism- Convention

2. 2 வெளிப்படுத்தும் மரபு
Convention of Disclosure

2. 3 நிலைத்தன்மை (கொள்கை மாறுமை) மரபு
Convention of Consistetency

2. 4 பொருள்சார் (முக்கியத்துவ) மரபு
Convention of Materiality

இப்பன்னிரண்டு கோட்பாடுகளுடன் மேலும் ஒரு வகையினதாக ஓர் கணற்கியல் எடுகோளும் இடம் பெறுகின்றது.

3 கணக்கியல் எடுகோளாக

3. 1 பணத்தின் உறுதித்தன்மை-Stability of Currency என்பதும் சேர்க்கப்பட்டு மேற்கூறப்பட்ட மூன்று வகையினதாக அமைகின்ற போதும்,

இலங்கைக் கணக்கீட்டு நியமம் (SLAS 3) அடிப்படைக் கணக்கீட்டு எண்ணக்கருக்களாக 1) தொடர்ந்தியங்கும் தொடரும் நிலை அமைப்பு 2) நிலைத்தன்மை எனும் கொள்கை மாறுமை மரபு 3) அட்டுறு எனும் /சேர் வுறல் எண்ணக்கரு எனும் மூன்றியுனைம் அங்கரித்துள் ளது இவற்றின் விளக்கங்களையும் இங்கே காண்போம்.

கணக்கியல் கருத்துகள்; கணக்கியல் எனும் அறிவியல் சார்ந் திருக்கும் அடிப்படை அனுமானங்கள் கணக்கியல் கருத்துக்களா கும். கணக்கியல் கருத்துக்களில் பின்வரும் முக்கியமானவற்றை நோக்குவாம்.

1. தனித்தன்மை கருத்து: (Separate entity concept) கணக்கியலில் நிறுவனமும் தொழில் நடவடிக்கைகளும் தனியா கவும் உமையாளர்கள் வேறாகவும் கருதப்படுன்றனர். கணக்கியல் கண்ணோட்டத்தில் தொழில் நிறுவனம் தனிப்பட்ட அலகு உரிமையாளர்கள் வேறு இதனால் கணக்கியலில் ஒரு நிறுவனம் தனித்தன்மை கருத்தாக கருதப்படுகின்றது. கம்பனிகளுக்கு மட்டு மன்றி சட்டரீதியானதனித்துவ மற்ற தனிப்பட்ட வியாப ரம், பங்குடமை போன்ற வற்றிக்கும் இது பொருத்தமுடையது உதாரணமாக இதனடிப்படையிலேயே உரிமையாளர்/பங்காளர் கணக்கு வேறாகப் பதியப்படுகின்றது.

2. தொடர்நிலைக்கருத்து: (Going concern) இக்கருத்தின்படி தொழிலானது நீண்டகாலம் நடைபெறும் என அனுமானித்துக் கொள்ளப்படுகின்றது ஒரு தொழில் நீண்ட காலம் நடை பெறாவெனக் கொண்டால் அளிப்போர் (Suppliers) பொருள் களை வழங்குவதும், பிற நிறுவனங்கள் இத்தொழிலுடன் தொடர்பு கொள்ளாமலும் போகலாம். நிறுவனம் மூடப்பட்டு

விடும் என்றே செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு விடுமென்றே கணக்கீட்டிற் கொள்ளப்படா. உ+ம் தேய்மானக் கழிப்பு ஒரே ஆண்டிலேயேலாப நட்டக்கணக்கில் தாக்கல் செய்யப் படுவதில்லை' அறவிட முடியாக்கடன் ஒதுக்கமும் அவ்வாறே உருவாக்கப்பட்டது. நிதிநிலைக்கூற்றுகள் தாயரிப்பதற்கும் இக் கருத்து முக்கியத்துவம் பெறுகின்றது. இதுவே தொடர்ந்தி யங்கு மெனும் கருத்தாகும்.

3. பணஅளவீட்டுக் கருத்து: (Money measurement concept) கணக்கியலில் பண நடவடிக்கைள் மட்டும் பதிவு செய்யப்படு கின்றது. பணத்தால் அளவிடமுடியாத நடவடிக்கைகள் தொழி லுக்கு பயனுள்ளதாக இருந்தாலும் அவை பதிவு செய்யப்படுவ தில்லை. உதாரணமாக தொழிலில் நம்பிக்கைக்கு பாத்திரமான மற்றும் திறமையான பணியாளர்கள் ஈடுபடுகின்றனர். இவர் களுடைய திறமையை பணத்தால் அளக்கமுடியாது. எனவே கணக்கியல் பதிவுகளில் இடம்பெறுவதில்லை. தொழிலின் நட வடிக்கைகள் பண அளவில் கட்டுப்படுவதால் தொழிலின் தன் மையை நன்கு புரிந்து கொள்ள முடிகின்றது.

4. கிரய எண்ணக்கரு: (Cost Concept) கணக்கியல் பதிவு கள் அடக்கவிலை அடிப்படையிலேயே செய்யபடுகின்றது. இக் கருத்து தொடர் நிலை கருத்துடன் நெருங்கிய தொடர் புடையது. தொழிலின் சொத்துக்களும் பொறுப்புகளும் கிரயம் அல்லது கொள்விலையிலேயே காட்டப்படுகின்றது. இச்சொத்துக் களைப்பற்றி மேற்கொண்டு செய்யப்படும் கணக்குகளுக்கு இந்த அடக்க செலவே அடிப்படையாக அமைகின்றது. சொத்துக்களின் மதிப்பு தேய்மானம் போக கணக்கிடப்படுகின்றது. சந்தைப் பெறுமதி உயர்வாக இருப்பினும் புத்தகப் பெறுமதியே கணக் கீட்டில் கொள்ளப்படும்.

5. இட்டை விளைவு கருத்து (Dual aspect concept) இது கணக்கீட்டு முறையின் அடிப்படை கருத்தாகும். நவீன கணக்கியல் முறை இரட்டைப்பதிவு முறையின் அடிப்படையில் அமைந்தது. இம்முறையில் ஒவ்வொரு பற்று நடவடிக்கைக்கும் பற்று வரவு என இருபதிவுகள் செய்யப்படுகின்றது. பற்று வர வுக்குச் சமமாக இருக்கும். இரட்டை விளைவு கணக்குப் பதிவி

யல் இவ்வடிப்படையின் மூலம் தோன்றியதாகும் ஒரு நடவடிக்கையானது பதிவில் இருவிளைவுகளைக் கொண்டிருக்கும்.

6. கணக்கியல் காலக்கருத்து (Accounting period concept) இக்கருத்தின்படி தொழில் நடவடிக்கையின் ஆயுள் காலம் பல பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு பிரிவிலும் வியாபாரத்தைப் பற்றி தெரிந்து கொள்ளும் வகையில் பிரிவுகள் அமைக்கப்படுகின்றன. ஒருபிரிவு (Segmet) அல்லது கால இடைவெளி கணக்கியல் காலம் அல்லது நிதியியல்காலமாகும். மேலும் நடவடிக்கைகளும் காலக்கிரம ஒழுங்கிலேயே பதிந்து கொள்ளப்படுவதுடன் நிதிக்கூற்றுகளும் குறிப்பிடப்பட்ட காலத்திற்குரித்தான நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகின்றதுஇது சாதாரணமாக ஒரு வருடமாக இருக்கும், (Accounting Financal year) இக்காலத்தின் முடிவில் இலாப நட்டக் கணக்கு இருப்பு நிலைகுறிப்பு ஆகியன தயார் செய்யப்படுகின்றன.

7. ஈடுகட்டும் மற்று சேர்வுறு கருத்து (Matchingl Accruel concep) இக்கருத்து கணக்கியல் காலகருத்தை அடிப்படையாக கொண்டது. ஒரு காலத்தில் நிறுவனத்தின் லாபத்தை உறுதிப்படுத்துவதற்கு வருமான வரவினங்களும் வருமானச் செலவினங்களும் ஈடு கட்டப்பட வேண்டும். இக்கருத்தின் படி இறுதிக் கணக்கை தயாரிக்கின்ற போது நிலுவைச் செலவினங்கள், முன்கூட்டி செலுத்தப்பட்ட செலவினங்கள் ஈட்டப்படாத வருவாய் ஆகியன சரிகட்டப்பட வேண்டும்: இக்கருத்துப் காலக்கருத்தடிப்படையிலெழுந்ததே.

8. தேறல்க் கருத்து (Realisation concept) இக்கருத்து வருவாய் தேறல் (realisation) பெறுவதுடன் தொடர்புடையது இக்கருத்தின் படி வருவாய் தீர்வு செய்யப்பட்ட தேதியில் ஈட்டப்பட்டதாக கருதப்படும். அதாவது பொருளின் உரிமை மாறும் போது அவர் அதற்கான ரொக்கத்தை கொடுக்க வேண்டியவராவார். விற்பனைப்பணம் கைக்கெட்டா விடினும் விற்பனை லாபம் கணக்கிற் கொடுக்கப்படும். இதே அடிப்படையிலேயே விற்பனைத் திரும்பல் சீராக்கம் பின்னர் இடம் பெறுகின்றது.

கணக்கியல் மரபுகள் (Accounting Conventions)

நிகிப் பதிவுகளை தயாரிக்கின்ற போது கணக்காளர்கள் சில கணக்கியல் மரபுகளை பின்பற்றுகின்றனர். இம்மரபுகள் தொழிலுக்கு உதவியாக இருக்கின்றது. பின்வருவன முக்கிய மரபுகளாக பின்பற்றப்படுகின்றன.

1. பழமை பேண் மரபு (Conservatism) பழமை பேண் மரபு என்பது எச்சரிக்கையான அணுகுமுறையாகும். தொழில்நடவடிக்கைகளில் மறைந்திருக்கும் இடர்களுக்கும் இழப்புக்களுக்கும் உறுதியின்மைக்கும் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை இம்மரபு வலியுறுத்துகின்றது. இதன்படி நட்டம் ஏற்படும் வாய்ப்பிருந்தால் அதை உடனடியாக கணக்கில் எடுத்துகொள்ள வேண்டும். லாபம் ஏற்படும் வாய்ப்பிருந்தால் அது பெறப்பட்டவுடன் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட வேண்டும். லாபத்தை எதிர்பார்க்க வேண்டாம். ஆனால் எல்லாவித நட்டங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

உ+ம் அந்தவகையில் கொள்விலையில் அல்லது தேறும் பெறுமதி இவற்றில் எது குறைவானதோ அதனையே கையிருப்பு /சரக்கிருப்பு பெறுமானமாக கணக்கிட்டிற்கொள்ளல் மரபு இம்மரபே விதியாகவலியுறுத்தப்படுகின்றது. இம் மரபுக் கருத்தினை கணக்காளர்கள் பின்பற்றுகின்றனர்.

2. வெளிப்படுத்தல் மரபு; (Convention of disclosure) இம் மரபின்படி கணக்கியல் அறிக்கைகள் எல்லாத் தகவல்களையும் முழுமையாக வெளிப்படுத்த வேண்டும். கணக்குகள் உண்மையாக தயாரிக்கப்பட்டு கடனீந்தோர் மற்றும் முதலீட்டாளர்களுக்கு தேவையான தகவல்களைத் தரும் வகையில் அமைக்கப்பட வேண்டும். கணக்கிற்காட்டப்படாத நடவடிக்கைகள், நட்டங்கள் பிரத்தியேகமாக அறிக்கை வடிவத்தில் தயார் செய்யப்பட வேண்டும். இதன் மூலம் எல்லா கருநிலை உண்மைகளும் வெளிப்படுத்தப்படுகின்றது.

3. நிலைத்ததன்மை மரபு: (Convention of Consistency) இம்மரபின் படி, பல்வேறு காலத்திற்கான கணக்கியல் கூற்றுகள்

ஒரே கணக்கியல் தத்துவத்தின் படி தயாரிக்கப்பட வேண்டும். உதாரணமாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான சரக்கிருப்பு அடக்க விலை அல்லது சந்தவிலை. இதில் எது குறைவாக இருக்கின்றதோ அதில் மதிப்பிட்டிருந்தால் அவ்வாறே அடுத்து வரும் காலங்களிலும் மதிப்பிட வேண்டும். இம்மரபு பல கணக்கியல் காலங்களில் ஏற்பட்டிருக்கும் நடவடிக்கைகளை ஒப்புநோக்க உதவுகின்றது எனவே ஆண்டுகளால் வேறுபடா கோட்பாடுகள் பேணப்பட வேண்டும். என்பது இம்மரபாகும்.

4.பொருள்சார் தன்மை மரபு: (Convention of materiality) இம்மரபின் படி பொருள்சார் உண்மைக்கு அதாவது முக்கியமான நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட வேண்டும். முக்கியமில்லாத வற்றை விட்டுவிட வேண்டும். அவ்வாறு விடப்படுவது கருநிலை உண்மையை பாதிக்க கூடாது. நடவடிக்கை முக்கியமான வையா? என்பதை கணக்காளரே முடிவு செய்கின்றார். பாரிய நிறுவனங்களில் சதம் கணக்கிற் கெடுக்கபடுவதில்லை. சில நிறு வனங்கள் (1000) ஆயிரங்களில் கணக்கு வைக்கின்றன.

மேற்கூறிய கணக்கியல் கருத்துகளும். மரபுகளும் நிதி நிலை கூற்று தயாரிக்கின்ற போது பயன்படுத்தப்படுகின்றது. இக் கருத்துக்களும் மரபுகளும் கடைபிடிக்கப்பட்டால் நிதி நிலைக் கூற்று உண்மையானதாக அமைகின்றது.

கணக்கியல் எடுகோள் (Accounting Assumption) பணத்தின் உறித்தித்தன்மை (Stability of Currercy) கணக்கியலில் பணத் தின் பெறுமதி அடிப்படையிலேயே அளவீடுகள் மேற்கொள்ளப் படுகின்றது பணத்தின் பெறுமதி பணவீக்கம் சுருக்கம் போன்ற காரணிகளால் பணப்பெறுமதிமுகப் பெறுமதியைக் காட்ட முடியாது என்பது யதார்த்தம் ஆனாலும் பணத்தின் பெறுமதி நிலையானது எனும் எடுகோளின் அடிப்படையிலேயே நிதிக்கூற்றுக் தயாரிக்கப்படுகின்றன.

உற்பத்தி அடிப்படையான நிறுவனங்களில் ஆகு செலவை (Cost) கணக்கிடுகையில் குறிப்பிட்ட கொள்கைகளும் நடைமுறைகளும் பின்பற்றப்படுகின்றது இவற்றையாம் காமைக் கணக்கியலின் கீழ் படிக்கின்றோம்.

முகாமைக்கணக்கியலில் கணக்கியல் கொள்கைகள்:

கணக்கியல் நடவடிக்கைகளை பதிவு செய்கையில் கணக்காளர்களால் கடைப்பிடிக்கப்படும் பொதுவான விதிமுறைகள் கணக்கியல் கொள்கைகளாகும் எனக்கண்டோம். கணக்கியலுக்கென்று பொதுவான கொள்கைள் மேலாண்மைக்கு முகாமைக் கணக்கியலிலும் கடைப்பிடிக்கப்படுகின்றது. அத்துடன் மேலாண்மை கணக்கியலுக்கென்று தனிப்பட்ட கொள்கைகள் இருக்கின்றன மேலும் இவை மேலாண்மை கணக்கியலின் முக்கிய பகுதியாக கருதப்படுகின்றது.

1. வகுத்தலும், தொகுத்தலும், (Designing & Compiling) ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கேற்ற கணக்கியல் விவரங்கள் பதிவுகள், அறிக்கைகள் போன்றவை வகுக்கப்பட்டும் தொகுக்கப்பட்டும் இருக்க வேண்டும்.

2. விதிவிலக்கு முகாமைத்துவம்: (Management by exception) ''விதிவிலக்கு மேலாண்மை தத்துவம்'' மேலாண்மைக்குத் தகவல்கள் தரப்படும்போது பின்பற்றப்படுகின்றது. அதாவது நோக்கம் அல்லது திட்டத்தினின்று விதிவிலக்கான விளைவுகளையும் முகாமையின் கவனத்தில் எடுத்தல் இங்குகுறிப்பிடத்தக்கது.

3. கணக்கியல் கட்டுப்பாடு: (Contorl at sourceaccounting) ஆகுசெலவு (Cost) அது எழுகின்ற இடத்திலேயே கட்டுப்படுத்தப்பட வேண்டும், அடக்கவிலையை கட்டுப் படுத்துவதென்பது ஒரு முக்கிய கணக்கியல் கொள்கை மட்டுமன்றி முகாமைத்துவத்திலும் முக்கிய இடம் பெறுகின்றது.

4. பணவீக்கத்திற்கானகணக்கிடல் (Aceounting for inflation) பண மதிப்பில் ஏற்படும் மாறுதல்கள் கணக்கியலில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் பணத்தின் மதிப்பு மாறாமல் இருக்கும் போதுதான் லாபம் உண்மையிலேயே ஏற்பட்டதாகும்.

5. மூலதனத்தின் மீதான வருவாய் (Use of Return on capital) மூலதனத்திலிருந்து கிடைக்கின்ற வருவாய் தொழில் திறமையை அளக்க உதவும் கருவியாக பயன்படுத்தப்பட வேண்டும்.

6. பயன்பாடு (Utilty) மோலண்மை கணகியல் முறைகள் சரியான பயன்கொடுக்கும் வரையில்தான் பயன்படுத்தப்பட வேண்டும்.

7. ஒருமைப்பாடு: (integration) மேலர்ண்மைத் தகவல்கள் அனைத்திலும் ஒருமைப்பாடு இருத்சல் வேண்டும். அப்பொழுது தான் கணக்கியல் சேவையை குறைந்த செலவில் அளிக்க முடியும், என்பது மட்டுமன்றி ஒப்பீட்டுரீதியில் ஒரு ஸ்தாபனத்தின் முகாமைத்திறனையும் வெளிக்காட்டும்.

8. மேந்தலைச் செலவுகள் ஈர்ப்பு:(Overhead adsorption) கிரய மையத்திற்கான செலவுகள் அது அடைந்த பயனின் அடிப்படையில் ஈர்க்கப்பட வேண்டும். விளைவின் விகிதத்திலான அடிப்படையில் கணக்கிடப்படும்.

9. வளங்களைப் பயன்படுத்துதல் (Utilistation of resourcs) ஒரு தொழிலில் சாதனங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்தப் பட்டிருக்கின்றதா என்பதை மேலாண்மைக் கணக்கியல் வெளிப் படுத்த வேண்டும்.

10. கட்டுப்படுத்தக்கூடிய, கட்டுப்படுத்தமுடியாத அடக்கச் செலவுகள்: (Controlable, Uncontrolable costs) கட்டுப்படுத்தக் கூடிய கட்டுப்படுத்த முடியாத ஆகு செலவுகளுக்கிடையேயான வேறுபாட்டை துல்லியமாக கணக்கிட வேண்டும். இதுவும் முகாமைத் திறனை அளக்கும் கருவியாகும்.

11 முன்னோக்கு அணுகுமுறை (Forward looking approach) முகாமை கணக்கியல் பிரச்சினையை எதிர்நோக்கி அதை தவிர்க்க வேண்டும்.

12. பொருத்தமான வழிமுறை (Appropriate means) கணக்கியல் தகவல்களை சேகரித்து பதிவு செய்து அளிக்க வேண்டிய சரியான வழிமுறையை தேர்ந்தெடுக்க வேண்டும்.

13. நேரிடையான தொடர்பு: (Personal Contacts) பகுதி மேலாளர், முகாரி (foremen) மற்றும் பிறருக்கிடையே நேரடியான தொடர்பு இருக்க வேண்டும்.

மேற்கூறிய கொள்கைகள் யாவும் கணக்கு வைப்பு முறை கொள்கைகள் ஆகும். இக் கொள்கைகள் முகாமைக் கணக்கியலில் கையாளப்பட வேண்டியிருக்கின்றது.

நிதிசார் கணக்கீடாயினும் முகாமைக் கணக்கியலிலாயினும் இத்துறைசார் மாணவர்களுக்கும் பயிலுனர்களும் படிக்கும் காலத்தே மட்டுமன்றி தொடர்ந்த இத்தொழில்சார் துறையிலும் இவ் அடிப்படைக் கோட்பாடுகளில் விழுமிய புலமை கொண்டிருத்தல் அவசியம்.

கணக்கியற் கோட்பாடுகள்

- கணக்கியல் எண்ணக்கருக்கள்
  - 1 தனித் தன்மை
  - 2 தொடர் நிலை
  - 3 பண அளவீடு
  - 4 கிரயம்
  - 5 இரட்டைப் பதிவுமுறை
  - 6 கணக்கியல் காலம்
  - 7 ஈடுகட்டுதல் சேர்வுறு
  - 8 தேறல்
- கணக்கியல் மரபு
  - 10 பழமை பேணுதல்
  - 11 வெளிப்படுத் துதல்
  - 12 நிலைத் தன்மை
- கணக்கியல் எடுகோள்கள்
  - 9 பணத்தின் உறுதித் தன்மை
  - 31 பொருன்சார் தன்மை

Complements
Equity Research Institute
Ulhumangunpur
Kaithady
29/12/20